# வேலணை மத்திய கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா
# VELANAI CENTRAL COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION - CANADA
(A Registered Non-Profit Organization)

4 Maple Beach Cres., Brampton, ON, L7A 2T9, Canada | **Tel:** 416-949-7795 / 416-661-3494 | **Fax:** 905-970-0450



**President**
S. Elancheliyan

**Vice President**
K. Kalyanasundaran

**Secretary**
S. Sritharan

**Assistant Secretary**
S. Meakavarnan

**Treasurer**
S. Sivakumar

**Auditor**
V. Sivanathan

**Committee Members**
P. Balasundaram
Pirabu Ponnampalam
K. S. Kathirgamanathan
S. Mahapooranan
Lokan Sundaram
Pon Panchalingam
K. Baskaran
R. Ruthirakanthan
S. Thayalan
T. Ilamurugan

**Patrons**
S. Sivaloganathan
A. Ariyaratnam
A. Senthilvadivel
A. Balendran
K. Gnanachchemmal


பேரன்புடையீர்,

எமது முன்னாள் அதிபர்கள் அமரர்கள் A. K. கந்தையா மற்றும் V. தம்பு விளையாட்டுத்திடலில் நடாத்தப்படும் ஒன்றுகூடல்-2012 நிகழ்வுக்கு வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் Dr. சபா குலத்துங்கம் அவர்களையும் சிறப்பு விருந்தினர் திரு. ந. பேரின்பநாதன் அவர்களையும் ஏனைய பழைய மாணவர்கள் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களையும் சங்கத்தின் சார்பில் இன்முகங்கொண்டு வரவேற்பதோடு முதற்கண் எனது அன்பான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது தாயக மக்களின் நீண்டகாலக் கல்விப்பாரம்பரியத்தை வலுப்படுத்தும் வகையில் எமது சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்து எமது இளைய சந்ததியினரின் கல்வி கலாச்சார முன்னேற்றத்தை இலக்காகக்கொண்டு மிகுந்த அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருவதனை நீங்கள் நன்கு அறிவீர்கள்.

எமது கல்விப்பாரம்பரியமானது நீண்ட போராட்டம் மற்றும் அர்ப்பணிப்புக்கள் மூலம் பேணப்பட்டுப் பல தியாகங்கள் மூலம் மலர்ச்சிகண்டது. இதன் தொடர்ச்சியாக தற்போதய மாணவர்களின் கல்வி மேம்பாடு என்பது எங்கள் சமுதாயத்தின் அறிவுப்பண்பாடு சார்ந்த கனவுகள் மற்றும் சமூகத்தின் நலிந்த தொகுதி மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்வதாக அமைய வேண்டும். கூடவே 21ம் நூற்றாண்டின் அறிவுசார் பொருளாதார கட்டமைப்புக்கு ஈடுகொடுப்பதாகவும் வளர்ச்சி காணவேண்டும் என்பதே என்போன்ற பழைய மாணவர்களின் அவா.

இந்த வகையில் கல்வியூடான சமுதாய தொழில் விருத்திகளோடு சமூக மற்றும் பண்பாட்டு ரீதியான மக்கள் அபிலாசைகளையும் நிறைவு செய்யும் இலக்குடன் எமது பணிகள் முன்னெடுக்கப்படும் என்பதனையும் தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

மேலும் இப்பெரும்பணி தொடரத் தங்கள் நல்லாதரவு தொடர வேண்டுமெனவும் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

***"எம் கடன் பணிசெய்து கிடப்பதே"***

வணக்கம்

நன்றியுடன்

சி. இளஞ்செழியன்
தலைவர்
29-07-2012

# வேலணை மத்திய கல்லூரி
## பழைய மாணவர் சங்கம் - கனடா

### எமது செயற்பாடுகள்

---

1) வேலணை மத்திய கல்லூரியிலிருந்து பல்கலைக்கழக அனுமதி பெற்றுப் பொருளாதார வசதியின்மையால் தமது பட்டப்படிப்பைத் தொடரமுடியாமல் அல்லலுறும் 39 மாணவர்களுக்கு (யாழ் பல்கலைகழகம் - 29 மாணவர்கள், கிழக்குப் பல்கலைகழகம் - 09 மாணவர்கள் மற்றும் பேராதனைப் பல்கலைகழகம் - 01 மாணவர்) மாதம் ஒன்றுக்கு மாணவர் ஒருவருக்கு தலா 3000.00 ரூபா (இலங்கை ரூபா) வீதம் மாதாமாதம் 117,000.00 ரூபா நிதியுதவியை தற்பொழுது வழங்கி வருவதோடு இத்திட்டத்திற்காக இதுவரை **13,187. 00** டொலர்களை அனுப்பியுள்ளோம். அத்துடன் இத்திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளோம். யூன்-2011 முதல் செயற்படுத்தப்பட்டுவரும் இத்திட்டம் வெற்றிகரமாகத்தனது முதலாண்டைப் பூர்த்திசெய்துள்ளதுடன் பலரது பாராட்டையும் பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

2) எமது கல்லூரி அதிபர் திரு. சி. கிருபாகரன் அவர்கள் 28-06-2011 திகதியிட்ட கடிதம் மூலம் விடுத்த வேண்டுகோளை ஏற்று **Cash Point** நிறுவன அதிபர் திரு. குமார் சுப்பிரமணியம் அவர்களது பொருளாதார அனுசரணையுடன் 10 கணனிகளைத் தலா 42000.00 ரூபா வீதம் **420, 000.00** ரூபாக்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்கான திட்டத்தை ஒருங்கிணைத்துள்ளோம்.

3) எமது கல்லூரி அதிபர் திரு. சி. கிருபாகரன் அவர்கள் 20-12-2011 திகதியிட்ட கடிதம் மூலம் விடுத்த வேண்டுகோளை ஏற்று 11 அலுமாரிகள் வாங்குவதற்கான நிதியுதவி **$ 1221.00** (**140, 000.00** ரூபா) ஐ அனுப்பியுதவியுள்ளோம்.

4) எமது கல்லூரி அதிபர் திரு. சி. கிருபாகரன் அவர்கள் 31-03-2012 திகதியிட்ட கடிதம் மூலம் விடுத்த வேண்டுகோளை ஏற்று மாணவர்கள் தமிழ்த்தினப்போட்டியில் பங்குபற்றுவதற்குத் தேவையான உடைகள் மற்றும் பக்கவாத்திய கருவிகள் வாடகைக்கான நிதியுதவி **$ 317.00** (**40, 000.00** ரூபா) ஐ அனுப்பியுதவியுள்ளோம்.

5) சங்கத்தின் வரலாற்றில் முதன்முதலாக Toronto Star பத்திரிகையில் Hon'ble Jack Layton அவர்களுக்கான கண்ணீர் அஞ்சலியை வெளியிட்டதன் மூலம் எமது நன்றியுணர்வைக் கனடா வாழ் பல்லின மக்களும் அறியும் வகை செய்தோம்.

6) கல்லூரியின் பழைய மாணவியும் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியுமான திருமதி. சரோஜினி இளங்கோவன் அவர்களுக்கான பாராட்டு விருந்துபசாரத்தை சிறந்த திட்டமிடலுடன் நன்கு ஒழுங்கமைத்து மண்டபம் நிறைந்த பழைய மாணவர்களுடன் நடாத்தியுள்ளோம்.

7) எமது சங்கத்தை [Velanai Central College Old Students' Association - Canada (VCCOSA-CANADA)] ஒன்ராறியோ அரசாங்கத்தில் ஓர் இலாப நோக்கமற்ற ஸ்தாபனமாகப் (A Non-Profit Organization) பதிவுசெய்துள்ளோம். பதிவு இலக்கம்: 1852223.

8) பழைய மாணவர் மற்றும் அவர்களது குடும்பத்தினரது மரணச்சடங்குகளின்போது சங்கம் சார்பான அனுதாபச்செய்தியை கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலம் தெரிவித்துவருகின்றோம்.

9) எல்லாவற்றுக்கும் மேலாகச் சங்கத்தின் நிதி நிலையை அதிகரித்துள்ளதுடன் சங்கத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து நன்கொடைகளுக்கும் பற்றுச்சீட்டுக்களை நன்றிக்கடிதங்களுடன் வழங்கிவருவதுடன் சிறந்த முன்னுதாரணமான நிர்வாகத்தையும் நடாத்திவருகின்றோம்.

சி. இளஞ்செழியன் (தலைவர்)  ச. சிறீதரன் (செயலாளர்)  சு. சிவகுமார் (பொருளாளர்)

# J/VELANAI CENTRAL COLLEGE
# யா/வேலணை மத்திய கல்லூரி

Phone:0213214169 Fax:0214590836 ID:1014019

Principal: Sivasamy Kirupaharan SLPS


கௌரவ தலைவர் ,
பழையமாணவர் சங்கம்,
வேலணை மத்திய கல்லூரி,
கனடா,
அவர்களுக்கு ,
வணக்கம்

<u>Steel Cupboard அன்பளிப்பு</u>

*தாங்கள் எமது கல்லூரி முகாமைத்துவக்குழுவின் வேண்டுகோளை ஏற்று ரூபா 140 000 பெறுமதிக்க 11* Steel Cupboard *அன்பளிப்பு செய்துள்ளமையை நாம் நன்றியுடனும் பெருமிதத்துடனும் ஏற்றுக்கொள்கின்றோம்.*

*தங்களின் இத்தகைய ஊக்குவிப்புக்கள் கல்லூரித்தாயின் வளர்ச்சியில் பெரிதும் உதவுகின்றது.*

*தங்களின் இப்பணி மேலும் தொடர எல்லாம்வல்ல சிவகாமிசமேத நடராஜப்பெருமானின் பாதாரவிந்தங்களை பணிந்தேற்றுகின்றோம்.*

*அதிபர்*
*சிவசாமி கிருபாகரன்*
*s.kirupa*

கௌரவ தலைவர்,
பழைய மாணவர் சங்கம்
வேலணை மத்திய கல்லூரி,
கனடா,

அவர்களுக்கு,
வணக்கம்,

தாங்கள் கல்லூரியின் தமிழ்த்தினப்போட்டி நிகழ்வுகளுக்காகவும் வேறு தேவைகளுக்காகவும் வழங்கப்பட்ட ரூபா 40 000 (நாற்பதாயிரம் ரூபா) இற்குரிய செலவு விபரம்

| | விபரம் | வவுச்சர் இல | செலவு | | Note |
|---|---|---|---|---|---|
| 1. | நாட்டுக்கூத்துப்போட்டி<br>வலய மட்டப்போட்டி- பயிற்சி உட்பட்டசெலவு | | | | வலய மட்டம் முதலாம் இடம் மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடம் |
| | பக்கவாத்தியம் - ஹார்மோனியம் | 1,2 | 4 000.00 | | |
| | பக்கவாத்தயம் - மிருதங்கம் | 3,4 | 3 000.00 | | |
| | ஒப்பனைக்கான உடுப்பு வாடகை | 5 | 1 500.00 | | |
| | ஒப்பனைக்கான ஓட்டோச்செலவு | 6 | 1 000.00 | | |
| | | | | 9 500.00 | |
| 2. | நாட்டுக்கூத்துப்போட்டி<br>மாவட்ட மட்டப்போட்டி- பயிற்சி உட்பட்டசெலவு | | | | |
| | பக்கவாத்தியம் - ஹார்மோனியம் | 7 | 1 000.00 | | |
| | பக்கவாத்தயம் - மிருதங்கம் | 8 | 1 500.00 | | |
| | பக்கவாத்தயம் - உடுக்கு | 9 | 500.00 | | |
| | ஒப்பனைக்கான செலவு | 10 | 2 500.00 | | |
| | | | | 5 500.00 | |
| 3. | நாட்டியம் - கோட்டமட்டம் | | | | வலய மட்டம் முதலாம் இடம் |
| | பக்கவாத்தியம் - மிருதங்கம் | 11 | 1 500.00 | | |
| | நாட்டியம் - வலய மட்டம் | | | | |
| | பக்கவாத்தியம் - மிருதங்கம் | 12 | 1 000.00 | | |
| | நாட்டியம் - மாவட்ட மட்டம் | | | | |
| | பக்கவாத்தியம் - மிருதங்கம் | 13 | 1 000.00 | | |
| | | | | 3 500.00 | |
| 4. | நாடகம் | | | | வலய மட்டம் முதலாம் இடம் |
| | வலய, மாகாண மட்டம் | 14 | 2 293.00 | | |
| | | | | 2 293.00 | |
| 6. | அறிவிப்புப்பலகை | 15 | 17 500.00 | | |
| | | | | 17 500.00 | |
| | மீதி | | | 1 707.00 | |
| | | | | 40 000.00 | |

S. Kirupaharan (signature)

Sivasamy Kirupaharan
Principal
J/Velanai Central College

# ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE CENTRAL DE VELANAI *(ASSECVEL)*
# வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் - பிரான்ஸ்


***Patron:***
Mr. S.Karalapillai
***President:***
Mr. S. Sripaskaran

***Secretary:***
Mrs. P. Thilagawathie

***Vice-President:***
Mr. S. Kashilingam

***Asst. Secretary:***
Mrs. B. Sakunthaladevy

***Treasurer:***
Mr. P. Kanthapapillai

***Commitee Members:***

Mr. Y. Balakrishnan
Mr. N. Mahendran
Mr. K. Ketheesvararajah
Mr. S. Karunanithy
Mr. S. Thevan
Mr. P. Thevathasan
Mr. R. Sathananthan
Mr. T. Sivanathan
Mr. Gnanasoruban
Miss. M. Valli
Mr. A. Thevathasan
Mr. A.Srikantharajah
Mr. S.Suntharajan
Mr. V.Amalotpavanathan

***Auditor:***
Mr. K. Kuganesan


பாரிஸ்
19.10.2011

தலைவர் / செயலாளர்
வேலணை மத்திய கல்லூரி ப.மா.சங்கம்,
கனடா.

அன்புடையீர்,

தங்கள் சங்கத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரதி, அதன் இணைப்புக்களுடன் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் திரு.ந.பேரின்பநாதன் அவர்களின் முயற்சியும், அதன் பயனாகத் தங்கள் சங்கம் மேற்கொண்டுள்ள எமது கல்லூரியின் பல்கலைக்கழக மாணவர் நிதி உதவித் திட்டமும் மிகவும் பயனுள்ளதும், பாராட்டப்பட வேண்டியதுமாகும். எமது கல்லூரியையும், தீவக மாணவர்களையும் தலைநிமிரச் செய்யும் முயற்சிகளில் இச்செயற்பாடு குறிப்பிடத்தக்க ஓர் இடத்தைப் பிடித்திருக்கிறது. இத்தகைய செயற்றிறன் மிக்க திட்டங்களில் தங்கள் சங்கம் மேன்மேலும் முன்னின்று உழைக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

எமது பிரான்ஸ் சங்கம் தன்னால் இயன்றவரை எமது கல்லூரியின் பல்வேறு திட்டங்களிலும் பங்குபற்றி வருகின்றது. தங்களின் இந்தத் திட்டம் எம்மை மேன்மேலும் எமது கல்லூரி பற்றியும், மாணவர் முன்னேற்றத்திற்கான வழிவகைகள் பற்றியும் சிந்திக்க வைத்திருக்கிறது. எமது கல்லூரியைத் தலைநிமிர வைக்க அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்

வணக்கம்

செ. ஸ்ரீபாஸ்கரன்
தலைவர்

செயலாளர்

ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE CENTRAL VELANAI SRI LANKA (ASSECVEL) FONDEE 1982
வேலணை ம.ம.வி. பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ்.
73,Rue Doudeauville
75018 Paris